அ.வ.எண். **22/2023** வா.சா.**1**–இந்திரமூர்த்தி **06.03.2025**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரதிவாதியை எனக்கு சிறுவயது முதல் தெரியும். அந்த விவரத்தை எனது வழக்குரையிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் நான் கூறவில்லை. தாவா கடனுறுதிச்சீட்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரத்தை எனது வழக்குரையிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் நான் கூறவில்லை என்றால் எனது வீட்டில் வைத்து எழுதப்பட்டது. கடனுறுதிச்சீட்டை எழுதியவர் என் பக்கத்து ஊரைச்சேர்ந்தவர். அவரை எனக்கு சிறுவயது முதல் தெரியும். தாவா கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பமிட்டுள்ள பாஸ்கரன், மதியழகன் ஆகியோரையும் எனக்கு ரொம்ப நாட்களாக தெரியும். அவர்கள் எனக்கு வேண்டியவர்கள். நான் பைனான்ஸ் தொழிலும், விவசாயமும், ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். அதிபதி பைனாஸ் கார்ப்பரேசன் என்ற பெயரில் நெ. 100, ஜவஹர் பஜார், கரூர் என்ற முகவரியில் 2010 வரை நடத்தி வந்தேன். அந்த காலக்கட்டத்தில் பிரதிவாதி என்னுடைய நிதிநிறுவனத்தில் வரவு செலவு வைத்திருந்தார். நான் 2023ம் வருடம் முதல் வருமானவரி செலுத்தி வருகிறேன். எனது வருமானவரி கணக்குகளை கரூரைச்சேர்ந்த தணிக்கையாளர் செந்தில்குமார் என்பவர் தணிக்கை செய்து வருகிறார். அவரது அலுவலகம் கோவை ரோட்டில் உள்ளது. பிரதிவாதிக்கு தாவாக்கடன் கொடுத்ததற்கு, கடனுறதிச்சீட்டை தவிர வேறு குறிப்புகள் எழுதி வைத்துள்ளேனா என்றால் இல்லை. கடனுக்கு பொறுப்பாக அசல் ஆவணங்கள் எதுவும் வாங்கினேனா என்றால் இல்லை. பிரதிவாதி என்ன வியாபாரம் செய்து வந்தார் என்றால் லாரி வைத்திருந்தார். அதிபதி நிதிநிறுவனத்தில் கடனுறுதிச்சீட்டை எழுதிய ஜெகநாதன் என்பவர் .........

பங்குதாரராக இருந்தார். அந்த நிதிநிறுவனத்தில் தாவா கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பமிட்டவர்கள் பங்குதாரர்களாக இல்லை. மேற்சொன்ன நிதிநிறுவனம் பதிவு செய்யப்பட்டதாகும். 2010 க்கு முன்பு பிரதிவாதி வாங்கிய கடன்களை கட்டி விட்டார். அதற்குரிய ஆவணங்கள் என் கைவசம் இல்லை. 07.07.2009 க்கு முன்பு வாங்கிய கடன்களை பிரதிவாதி செலுத்திவிட்டு, 07.07.2009 அன்று ரூ.3,20,000/-ஐ அதிபதி பைனான்ஸ் நிதிநிறுவனத்திலிருந்து பிரதிவாதி கடனாக வாங்கினார் என்றால் சரிதான். அந்த கடனுக்கு ஆதரவாக கடன் விண்ணப்பத்திலும், நிதிநிறுவனத்தின் பெயர் அச்சிடப்பட்ட ஒரு பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிச்சீட்டிலும், நிதிநிறுவனத்தின் பெயர் அச்சிடப்படாத, பூர்த்தி செய்யப்படாத கடனுறதிச்சீட்டிலும் பிரதிவாதி கையொப்பமிட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. கடன் விண்ணப்பத்திலும், பூர்த்தி செய்யப்பட்ட அச்சிடப்பட்ட கடனுறுதிச்சீட்டிலும் கையெழுத்திட்டு கொடுத்தார். பிரதிவாதியிடம், அச்சிடப்படாத, பூர்த்தி செய்யப்படாத மூன்று கடனுறதிச்சீட்டுக்களில், இரண்டு ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டி கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. 07.07.2009 அன்று பிரதிவாதி வாங்கிய கடனை பிரதிவாதி கட்டி விட்டார். மேற்படி கடனுக்கு வட்டி பாக்கி இருந்தது என்றும், வட்டி பாக்கிக்காக பிரதிவாதி கையெழுத்திட்டுக்கொடுத்த நிதிநிறுவனம் பெயர் அச்சிடப்படாத கடனுறுதிச்சீட்டுக்களை நான் வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த கடனுறுதிச்சீட்டுக்களை பிரதிவாதி திரும்ப கேட்டபோது, நிதிநிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டது என்றும், அந்த கடனுறுதிச்சீட்டுக்கள் என் வீட்டில் உள்ளன என்றும் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. அந்த

கடனுறுதிச்சீட்டை பயன்படுத்தி, இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 10.05.2020 அன்று கொரோனா தொற்று காரணமாக, ஊரடங்கு அமுலில் இருந்தது என்றும், மேற்சொன்ன தேதியில் பிரதிவாதி என் வீட்டிற்கு வந்து கடன் வாங்கினார் என்று நான் சொல்வது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன தேதியில், பிரதிவாதி என்னிடம் தாவாக்கடனை வாங்கவில்லை என்றும், அதற்கு ஆதரவாக தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கடனுறுதிச்சீட்டை எழுதியவர் மற்றும் சாட்சிகள் எனக்கு வேண்டிய நபர்கள் என்றும், அவர்களை வைத்து தாவா கடனுறதிச்சீட்டை உருவாக்கியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா கடனுறுதிச்சிட்டு மறுபயனற்றது என்றால் சரியல்ல.

அதிபதி பைனான்ஸ் கார்ப்பரேசன் தற்போதும் இயங்கி வருகிறது என்றும், வழக்கிற்காக அந்த நிறுவனம் மூடப்பட்டுவிட்டது என்று தவறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதிபதி பைனான்ஸ் கார்ப்பரேசன், அதிபதி இன்வஸ்ட்மெண்ட்ஸ் மற்றும் அதிபதி கேபிடல்ஸ் ஆகிய நிதிநிறுவனங்கள் தற்போதும் இயங்கி வருகின்றன என்றால் சரியல்ல. மேற்சொன்ன நிதிநிறுவனங்கள் கலைக்கப்பட்டது குறித்து, பதிவாளரிடம் பதிவு செய்துள்ளேன்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்
மாவட்ட நீதிபதி,
கரூர்.

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதியை எனக்கு சிறுவயது முதல் தெரியும். நன்கு பழக்கமானவர். வாதியும் நானும் அதிபதி பைனான்ஸ் கார்ப்பரேசன், அதிபதி இன்வஸ்ட்மெண்ட்ஸ், அதிபதி கேபிடல்ஸ் ஆகிய நிதிநிறுவனங்களில் பங்குதாரர்களாக இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. பங்குதாரர்களாக இருந்தோம். அந்த நிதிநிறுவனங்களை 2010ம் வருடத்தில் கலைத்துவிட்டோம். 2010ம் வருடத்திற்கு முன்பே, பிரதிவாதி மேற்சொன்ன நிதிநிறுவனங்களில் வரவு செலவு வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியை எனக்கு தெரியும். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில், தாவாக்கடன் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றும், கடன் வாங்குவதற்கு பிரதிவாதி எப்போது வந்தார் என்றும் நான் சொல்லவில்லை. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் வாதியின் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். நான் சொன்னதை தட்டச்சு செய்தனர். பிரதிவாதி என்ன வியாபாரம் செய்தார் என்று நான் எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் கூறவில்லை. 2009ம் வருடத்தில் அதிபதி கேபிடல்ஸ் நிதிநிறுவனத்தில் பிரதிவாதி கடன் வாங்கியபோது கொடுத்த நிரப்பப்படாத கடனுறதிச்சீட்டை வைத்து வாதியுடன் சேர்ந்து தாவா கடனுறுதிச்சீட்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 10.05.2020 கொரோனா காலக்கட்டம் என்றும், அன்றைய தேதியில் பொதுமக்கள் யாரும் வெளியே வரக்கூடாது என்று ஊரடங்கு இருந்தது என்றும், அந்த தேதியில் பிரதிவாதி கடன் வாங்கினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன தேதியில், பிரதிவாதி வாதியிடம் .....

எந்த கடனும் வாங்கவில்லை என்றும், தாவா கடனுறதிச்சீட்டை நான் எழுதினேன் என்று சொல்வதும் பொய் என்றும் சொன்னால் சரியல்ல. நானும், வாதியும், சாட்சிகள் மதியழகன், பாஸ்கரன் ஆகியோர் சேர்ந்து, தாவா கடனுறுதிச்சிட்டை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா கடனுறுதிச்சீட்டு மறுபயனற்றது என்றால் சரியல்ல. துர்லாபம் அடைய வேண்டும் என்பதற்காக வாதியுடன் சேர்ந்து தாவா கடனுறுதிச்சீட்டை உற்பத்தி செய்து, வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்
மாவட்ட நீதிபதி,
கரூர்.

அ.வ.எண். **22/2023** வா.சா.**3–**மதியழகன் **06.03.2025**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதியும், நானும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள். அவரை எனக்கு பல வருடங்களாக தெரியும். வாதியும், வா.சா.2 ஜெகநாதனும் கரூரில் நிதிநிறுவனம் நடத்தி வந்த விவரம் எனக்கு தெரியும். தற்போதும் அதே முகவரியில் நிதிநிறுவனம் நடத்தி வருகின்றனர். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில், வாதி பிரதிவாதிக்கு எங்கு வைத்து கடன் கொடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி வீட்டில் வைத்து கடன் கொடுத்தார். எனது முதல்விசாரணை வாக்குமூலம் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது. நான் சொன்ன விவரங்களின் பேரில் வழக்கறிஞர் தயார் செய்தார். நான் சொன்னபடி, தாவா கடனுறுதிச்சீட்டில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றும், வாதியிடமிருந்து பிரதிவாதி தாவாக்கடனை வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதியிடமிருந்து பிரதிவாதி கடன் வாங்கிக்கொண்டு, கடனுறுதிச்சீட்டில் கையெழுத்திட்டதை நான் பார்த்தேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான், வாதி, வா.சா.2 ஜெகநாதன் ஆகியோர் ஒரே ஊரைச்சேர்ந்த நல்ல பழக்கமானவர்கள் என்றும், அதனடிப்படையில் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க, பிரதிவாதி 2009 ம் வருடம் கையெழுத்து மட்டும் போட்டுக்கொண்டிருந்த நிரப்பப்படாத கடனுறுதிச்சீட்டை உற்பத்தி செய்து, வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட நீதிபதி,
கரூர்.